[1st July 1957

SRI T. P. SRINIVASAVARADAN : Will the Government consider granting them increments generally?

THE HON. SRI C. SUBRAMANIAM : But now the private managements treat the appointments as fresh ones and, therefore, the previous service is not available for purposes of leave salary or increment.

SRI G. KRISHNAMOORTHY : Will the Government kindly see that such breaks as can be avoided by the managements are avoided, that a rule is passed in favour of elementary school teachers that they should not be sent away and that the Inspecting Officers are advised to see that the rule is strictly enforced?

THE HON. SRI C. SUBRAMANIAM : I have already stated that this is engaging the attention of the Government.

Exploitation of iron ores

* 8 *Q*.—SRI A. SUBRAMANYAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government for the exploitation of iron ores in Salem district; and

(*b*) if so, whether the iron ores will be reserved for exploitation by the Central Government or the State Government or whether it will be leased to any private individual?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) It is expected that a large commercial plant for the manufacture of pig iron from the iron ores of Salem district will be set up in the public sector by the Government of India, as soon as certain preliminary investigations are carried out successfully at the National Metallurgical Laboratory, Jamshedpur. Meanwhile, licences are being granted for a few applicants for the establishment of small pig iron plants based on the Salem ores, the capacity of the plants being limited to 15,000 tons per year.

SRI A. SUBRAMANYAM: கனம் தலைவர் அவர்களே, கோயம்பத்தூரில் உள்ள ஒரு கம்பெனிக்கு அந்தத் தொழிற்சாலையை நடத்துவதற்கு காண்ட்ராக்ட் கொடுக்கப்பட்டதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : ஆம் ; கோயம்பத்தூரில் உள்ள ஒரு கம்பெனிக்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது.

SRI A. SUBRAMANYAM : கனம் தலைவர் அவர்களே, சேலத்தில் இருப்பவர்களுக்கு ஏன் அந்த காண்ட்ராக்டை கொடுக்கவில்லை என்று அறிய விரும்புகிறேன் ?

THE HON. SRI R. VENKATARAMAN : சேலத்தில் இருந்தாலும் சரி, கோயம்பத்தூரில் இருந்தாலும் சரி எல்லோருக்கும் சம உரிமைதான் வழங்கப்படுகிறது. சேலத்திலிருந்து இந்த விஷயமாக ஒரு அப்பிளிகேஷனும் வரவில்லை.

1st July 1957]

Sri V. V. RAMASWAMI : சேலத்தில் இருக்கும் இரும்பு சத்து ஆராய்ச்சி நிலையத்திற்கு அனுப்பப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அப்படி இருக்கும்போது தனியார் தொகுதியில் உள்ளவர்களுக்கு லைசென்ஸ் கொடுத்திருப்பதாகச் சொல்கிறார்கள். ஆராய்ச்சி முடிவதற்குள் எப்படி தனிப்பட்ட நபர்கள் இந்த விஷயத்தில் இறங்குவார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri R. VENKATARAMAN : தனியார் தொகுதியிலுள்ள முதலாளிகள் ஓரளவு லாபமோ நஷ்டமோ இருந்தாலும் பரவாயில்லை என்று முயற்சி செய்து பார்க்கலாம் என்று முன்வருவார்கள். சேலத்தில் உள்ள இரும்பு சத்து போதுமானது என்று கருதி ஒரு தனி நபர் சமீபத்தில் அத்தொழிலை நடத்துவதாகச் சொன்னார்கள். சென்னை சர்க்கார் அவருக்கு சிபார்சு செய்தது. இம்மாதிரி தொழில்களை நடத்துவதற்கு முன் அதில் இருக்கக்கூடிய லாபத்தைக் கருதி, நிபுணர்களைக் கொண்டு ஆராய்ந்து பார்த்து, பிறகு சர்க்கார் நடத்துவதாக இருந்தால் பொறுப்பு ஏற்றுக்கொள்ளும்.

Sri V. CHAKKARAI CHETTY : செக்கோஸ்லோவாகியாவிலிருந்து நிபுணர்கள் வந்து ஆராய்ச்சி செய்து ஆலோசனை கூறுவதாக பேப்பரில் பார்த்தேன். இது உண்மையா ?

The Hon. Sri R. VENKATARAMAN : இதைப்பற்றி எந்தவிதமான தகவலும் இல்லை.

Sri V. V. RAMASWAMI : இந்த ஆராய்ச்சி சரிவர முடிந்த பிறகு சர்க்கார் அதை ஏற்று நடத்த முன்வருவார்களா, அல்லது தனியார் தொகுதிக்கு விட்டுவிடுவார்களா ? அந்தத் தொழிலை ஏற்று நடத்துவதற்கு மத்திய சர்க்கார் உதவி செய்தால் அதை நமது சர்க்கார் ஏற்று நடத்துவார்களா ?

The Hon. Sri R. VENKATARAMAN : Sir, it is a hypothetical question. But, at the same time, I can say that there is scope for large plants as also for a number of small enterprises.

Sri V. GOVINDAN ROW : Will the Government place on the table of the House the number of persons who have been granted licences and their names?

The Hon. Sri R. VENKATARAMAN : I can give the information straightway. Only one licence has been granted to the Textool Co., Coimbatore. Another application by the Ramakrishna Industries, Coimbatore, has been recommended by the Madras Government and it is awaiting the sanction of the Licensing Committee. Besides, there are three other persons who have applied for plants and they are, one from Mettupalayam, one from Salem and another from Salem.

Sri A. SUBRAMANYAM : சேலத்திலிருந்து காண்ட்ராக்ட் மூலமாக எடுத்து நடத்துவதற்கு விண்ணப்பம் கொடுத்தால் அதை அரசாங்கம் கவனிக்குமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : விண்ணப்பம் வந்தால் அதை அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

Mr. CHAIRMAN : Questions are over.